செ.வெ.எண்.42 நாள் : 16.11.2019

**அரியலூர் மாவட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான மாவட்ட அளவிலான விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.**

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக் கூட்டரங்கில் மாவட்ட தொழில் மையம் மூலம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான மாவட்ட அளவிலான விழிப்புணர்வு முகாம் **மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இஆப., அவர்கள்** தலைமையில் நடைபெற்றது.

**இம்முகாமில், தொழில்முனைவோர்களுக்கு வங்கி கடனுதவிக்கான காசோலையினை வழங்கி, மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது,**

அரியலூர் மாவட்டத்தில் சுய தொழில் தொடங்கும் நபர்கள், தங்களது உற்பத்தி பொருட்களின் தரத்தில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். தரமான பொருட்களை உற்பத்தி செய்து சரியான முறையில் சந்தைபடுத்துவதன் மூலம் அதிக லாபம் பெறலாம். செய்யும் தொழிலில் நேர்மையும், உண்மையான உழைப்பும் மட்டுமே வெற்றிக்கு வழி வகுக்கும். மேலும், இம்மாவட்டம் பெரும்பாலும் விவசாயம் சார்ந்த மாவட்டமாக உள்ளதனால், வேளாண் பொருட்களுக்கு மதிப்பு கூட்டும் சுயதொழில் தொடங்க முன்வர வேண்டும்.

இம்முகாமில், மாவட்ட தொழில் மையம் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்த விளக்கக்காட்சி (Powerpoint Presentation) மற்றும் திட்ட விளக்கங்கள், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் மூலம் செயல்படுத்தபடும் திட்டங்களில் வங்கியின் பங்கு மற்றும் வங்கியின் இதர சேவைகள் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது.

தொடர்ந்து, பாரத ஸ்டேட் வங்கி, பொன்பரப்பி கிளையின் சார்பாக 7 பயனாளிகளுக்கு ரூ.7.00 இலட்சம் கடனுதவிக்கான வங்கி வரைவோலை மற்றும் கனரா வங்கி, திருமழப்பாடி கிளையின் சார்பாக 8 பயனாளிகளுக்கு ரூ.6.50 இலட்சம் கடனுதவிக்கான வங்கி வரைவோலை வழங்கப்பட்டது. இக்கூட்டத்தில் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர், உதவி திட்ட அலுவலர், மகளிர் திட்டம், பாங்க் ஆப் இந்தியா வங்கி கிளை மேலாளர், ஊரக சுயதொழில் வேலைவாய்ப்பு பயிற்சி அளிக்கும் நிறுவன பயிற்சியாளர்கள், கலந்து கொண்டனர். இம்முகாமில் 160 தொழில் முனைவோர்கள் கலந்து கொண்டனர்.

மேலும், மாவட்ட தொழில் மையம் மூலம் செயல்படுத்தப்படும் மானியத்துடன் கூடிய வங்கிக்கடன் பெறுவதற்கு இணையதளம் வாயிலாக விண்ணப்பங்கள் சமர்ப்பித்து பயன்பெறுமாறும், கூடுதல் விபரங்கள் பெற பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம், வாலாஜாநகரம், அரியலூர் (தொலைபேசி எண்: 04329-228555) அலுவலகத்தை அணுகுமாறும் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இம்முகாமில், அரியலூர் மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் மா.சண்முகராஜன், இளநிலை செயல் அலுவலர் திரு.ஆர்.டி. ஜெயக்குமார், மாவட்ட கனரா வங்கி தலைமை மேலாளர் கே.முரளி மோகன், பாரத ஸ்டேட் வங்கி மேலாளர் கே.ரமேஷ், மாவட்ட தொழில் மைய திட்ட மேலாளர் வீ.சகுந்தலா மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**